23.9.2019

STC 1/2017

PW1 முத்துகுமரன்

குறுக்கு விசாரணை

நான் பொறியாளர் பட்டய படிப்பு படித்துள்ளேன். இன்றய தேதியில் எனக்கு 42 வயது ஆகியுள்ளது. 2003ம் ஆண்டு முதல் நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். புகாரில் எதிரியும் நானும் சேர்த்து ஒரு வருடமாக தொழில் செய்வதாக குறிபிட்டுள்ளேன். புகார் மற்றும் பிரமாணவாக்குமூலத்தில் நானும் எதிரியும் சேர்த்து ரியல் எஸ்டேட் தொழில் செய்வதாக குறிபிடபடவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கு கடன் கொடுத்தாக கூறபடும் காலத்தில் நான் தனியாக தொழில் செய்து கொண்டிருந்தேன். ரியல் எஸ்டேட் தொழில் தவிர்த்து லாரி போக்கு வரத்து தொழில் செய்து வருகிறேன். ரியல் எஸ்டேட் தொழில் மூலமாக வருடத்திற்கு 5லட்சம் முதல் 10 லட்சம் வருட வருமானம் வரும். லாரி போக்குவரத்து தொழிலை 2015 முதல் செய்கிறேன். டிப்பர் லாரி மூலமாக கட்டுமான பொருள்கள் சப்லே செய்கிறேன். மேற்படி தொழில் மூலம் ஆண்டிற்கு 3இருந்து 4 லட்சம் வருமானம் வரும். எனக்கு விவசாயத்தின் மூலமும் வருமானம் வருகிறது. நான் வருமானவரி செலுத்தி வருகிறேன் என்றால் சரிதான். 20ஆயிரத்து மேல் அடுத்தவருக்கு பணம் கொடுக்கும் போது ரொக்கமாக இல்லாமல் காசோலையாக கொடுக்க வேண்டும் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். என் தந்தை முன்னால் சட்டமன்ற உறுபினர் என்றால் சரிதான். என் வருமானம் குறித்து எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரி என்னுடைய குடும்ப நண்பர் என்பதால் அவர் குடும்பம் பற்றிய விபரம் தெரியும் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த காலத்தில் எதிரி என்ன வேலை பார்த்தார் என்றால் வேலை எதுவும் பார்க்கவில்லை. புகார் மற்றும் பிரமாணவாக்குமூலத்தில் எதிரிக்கு எந்த தேதியில், எங்கு வைத்து பணம் கொடுத்தேன் என்று குறிபிட்டு கூறவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு பணம் கொடுக்கும் போது என்னுடைய அம்மா உடன் இருந்தார். எதிரி எந்த தேதியில் பணத்தை திருப்பி கொடுப்பதாக கூறினார் என்று புகார் மற்றும் பிரமாணவாக்குமூலத்தில் குறிபிட்டுள்ளீர்களா என்றால் காசோலையில் குறிபிட்டுள்ள தேதியில் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்து எடுத்து கொள்ளுமாறு கூறினார். 10.7.2016ம் தேதி எதிரிக்கு கடன் கொடுத்தேன். அன்றய தேதியே காசோலை வழங்கினாரா என்றால் பணம் கொடுத்த போதே காசோலை வழங்கினார். ஒரு மாத காலம் கழித்து பின் தேதியிட்டு வழங்கினார் என்றால் சரிதான். பிரமாணவாக்குமூலத்தில் 10.8.2016ம் தேதி காசோலை வழங்கியதாக குறிபிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அந்த தேதியிட்டு காசோலை வழங்கினார். காசோலையில் குறிபிட்டுள்ள தேதியிலேயே வசூலுக்கு தாக்கல் செய்தேன். ஸ்டாப்பேமண்ட் கொடுத்தாக திருப்புதல் குறிப்பாணையில் வந்தது. மேற்படி விபரத்தை தொலைபேசி வாயிலாக தெரிவித்தேன். என்னுடைய தொலைபேசி எண் 9841409770 என்றால் சரிதான். மேற்படி எண்ணில் இருந்து எதிரிக்கு குறும் செய்தி அனுப்பினேன் என்றால் சரிதான். பணத்தை திருப்பி கொடுக்குமாறு அனுப்பினேன். நாட்கள் ஆனதால் சரியாக ஞாபகம் இல்லை. எந்த தேதியில் குறும் செய்தி அனுப்பினேன் என்று ஞாபகம் இல்லை. 23.8. நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். வழக்கு காசோலையை தவிர்த்து வேறு எந்த ஆவணமும் எதிரியிடம் எழுதி பெறவில்லை.

(எதிரி தரப்பு வழக்கறிஞர் மேற்கொண்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு கால அவகாசம் கோரியதற்கு இந்நீதிமன்றம் குறுக்கு விசாரணை இன்று செய்யவேண்டும் என்று வழியுறுத்திற்கு மேலும் மேலும் கால அவகாசம் கோரியதால் நீதிமன்றம் குறுக்கு விசாரணையை இன்றுடன் முடித்து வைக்கிறது.)